## அக்டோபர் – 31 – பொதுக்கால30ம் செவ்வாய்
## தூய அல்போன்ஸ் ரொட்ரிக்கஸ்

### ஆண்டவர் நமக்கு மாபெரும் செயல் புரிந்துள்ளார்:
### திபா. 126:3

### முதல் வாசகம்: உரோமையர் 8 : 18 - 25

சகோதர சகோதரிகளே!இக்காலத்தில் நாம் படும் துன்பங்கள் எதிர்காலத்தில் நமக்காக வெளிப்படப் போகிற மாட்சியோடு ஒப்பிடத் தகுதியற்றவை என நான் எண்ணுகிறேன்.இம்மாட்சியுடன் கடவுளின் மக்கள் வெளிப்படுவதைக் காண்பதற்காகப் படைப்பே பேராவலோடு காத்திருக்கிறது.ஏனெனில், படைப்பு பயனற்ற நிலைக்கு உட்பட்டுள்ளது் தானே விரும்பியதால் அப்படி ஆகவில்லை அதை உட்படுத்தினவரின் விருப்பத்தால் அவ்வாறு ஆயிற்று் எனினும் அது எதிர்நோக்கை இழந்த நிலையில் இல்லை.அது அழிவுக்கு அடிமைப்பட்டிருக்கும் நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டு, கடவுளின் பிள்ளைகளுக்குரிய பெருமையையும் விடுதலையையும் தானும் பெற்றுக்கொள்ளும் என்கிற எதிர்நோக்கோடு இருக்கிறது.இந்நாள்வரை படைப்பு அனைத்தும் ஒருங்கே பேறுகால வேதனையுற்றுத் தவிக்கின்றது என்பதை நாம் அறிவோம்.படைப்பு மட்டும் அல்ல் முதல் கொடையாகத் தூய ஆவியைப் பெற்றுக் கொண்டுள்ள நாமும் கடவுள் நம்மைத் தம் பிள்ளைகளாக்கப்போகும் நாளை, அதாவது நம் உடலை விடுவிக்கும் நாளை எதிர்நோக்கிப் பெருமூச்சு விடுகிறோம்.நமக்கு மீட்புக் கிடைத்துவிட்டது. எனினும், எதிர்நோக்கும் அளவில்தான் அது கிடைத்துள்ளது. கண்ணுக்குத் தெரிகிறதை நோக்குதல் எதிர்நோக்கு ஆகாது. ஏற்கெனவே கண்ணால் காண்கிறதை எவராவது எதிர்நோக்குவாரா?நாமோ காணாத ஒன்றை எதிர்நோக்கி இருக்கும்போது அதற்காக தளராமனத்தோடு காத்திருக்கிறோம்.

**பதில்பாடல் :** ஆண்டவர் மாபெரும் செயல் புரிந்துள்ளார்.
அதனால் மகிழ்ச்சியுறுகிறோம்.

### நற்செய்தி:லூக்கா 13 : 18 - 21

அக்காலத்தில் இயேசு மக்கள் கூட்டத்தைப் பார்த்து, ”இறையாட்சி எதற்கு ஒப்பாயிருக்கிறது? அதை நான் எதற்கு ஒப்பிடுவேன்?அது ஒரு கடுகு விதைக்கு ஒப்பாகும். ஒருவர் அதை எடுத்துத் தம் தோட்டத்தில் இட்டார். அது வளர்ந்து மரமாயிற்று. வானத்துப் பறவைகள் அதன் கிளைகளில் தங்கின” என்று கூறினார்.மீண்டும் அவர், ”இறையாட்சியை எதற்கு ஒப்பிடுவேன்?அது புளிப்புமாவுக்கு ஒப்பாகும். பெண் ஒருவர் அதை எடுத்து மூன்று மரக்கால் மாவில் பிசைந்து வைத்தார். மாவு முழுவதும் புளிப்பேறியது” என்றார்.

**தியானம்:** இறைவனுடைய ஆட்சிகாலத்தில் அவருடன் விண்ணரசிற்குள் நாங்கள் செலவதற்கு எவ்வாறு வாழவேண்டும் என்றும், அவ்வாறு வாழும் பொழுது கிடைக்கும் பயன் என்ன என்பதை இன்றைய தியான வாசகங்கள் தெரிவிக்கின்றன. மண்ணுலகில் பிறப்பவர் ஒவ்வொருவரும் இறப்பது விதிவிலக்கல்ல. நாங்கள் வாழும் காலங்களில் எவ்வாறு வாழ்கின்றோம் என்பதே முக்கிமானதாகும். ஒருவர் நிலத்தில் விதைகளை விதைக்கின்றார். அது பெரிதாக வளர்ந்து வானத்துப் பறவைகள் வந்து தங்கி இளைப்பாறிச் செல்கின்றன. இவ்வுவமை மூலம் விதைகளிவே சிறியதானது எவ்வாறு பெரிதாக பலனை அளிக்கின்றது என்பதை தெரிவிக்கின்றுது. அதேபோன்று மண்ணுலகில் விதைகளாக விதைக்கப்பட்ட நாங்கள் பலனைக் கொடுக்கும் வகையில் எவ்வாறு செயற்படுகின்றோம் என்பதை நாங்களே எங்களை கேட்டுப்பார்ப்போம். சிந்திப்போமாயின் பயனற்ற கருவிகளாகவே இருக்கின்றோம். இதற்காக நாங்கள் எங்களை மாற்றிக்கொள்ள வேண்டும். அதற்காக எவ்வாறான சோர்வுகள், தடைக்கற்கள் போன்ற சம்பவங்கள் ஏற்பட்டாலும் யாவற்றையும் ஏற்றுக்கொண்டவர்களாக மற்றவர்களுக்கு பலன் கொடும்கும் வகையில் எங்களை தயார்படுத்த வேண்டும். இவ்வாறு வாழும் பொழுது நாங்கள் விண்ணரசிற்குள் செல்வது கடினமானதாக இருந்தாலும் கூட சிறிது சிறிதாக எங்களைத் தயார்படுத்துகின்றோம். இறுதியில் எதிர்பாராத நேரத்தில் மனுமகன் வரும் பொழுது 10 கன்னியர்களுள் 5 கன்னியர்கள் முன்மதியுடன் செயற்பட்டார்களோ அதேபோன்று நாங்களும் முன்மதியுள்ளவர்களாக வாழ்ந்து கிறிஸ்துவோடு பயனிக்க விழித்துக் காத்திருப்போம்.